Rejistered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸு ஐப்பசி மீ 18 உ ஞாயிற்றுக்கிழமை (04 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 15 ஓசை 250

## ஆசிரியர் சம்பளத்தை பணமாகவழங்ககோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நவம்பர் மாதத்திலிருந்து ஆசிரியர்களினது மாதாந்த வேதனத்தை காசாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் கடந்த ஜூன் மாதத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கிய காசோலைகளை மாற்றுவதற்கு 150 மில் (4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால்

# சிறிலங்கா அரசாங்கத்திற்கு பாரிய நிதி நெருக்கடி

## 2500 கோடி ரூபா திறைசேரி உண்டியல் மூலம் திரட்ட முடிவு

(கொழும்பு)

வடக்கு–கிழக்கில் நடைபெறும் யுத்தம் காரணமாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்யும் முகமாக பொதுமக்களிடம் இருந்து திறைசேரி உண்டியல் மூலம் 2500 கோடிரூபாவை கடனாகத்திரட்ட முடிவு செய்து, அதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

கடந்தவருட வரவு செலவுத் திட்டச் செலவீனங்களில் வடக்கு-கிழக்கு யுத்தம் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்திவிட்டதுடன் அரசாங்கத்திற்குப் பெரும் செலவீடுகளையும் தோற்றுவித்தது. அதேவேளை அரசாங்கம் பெற்றுக்கொண்ட உதவிகள் போதுமானவையாக இல்லாமையால் பொதுச் சேமிப்புக்களில் இருந்து கடன் படுவதைத் தவிர வேறுவழி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவதுஇந்த 2500 கோடி ரூபா கடனுடன் தற்போது நிர்ணயிக்கப்பட்ட சிறிலங்கா அரசாங்கத்தின் 6500 கோடி ரூபா, தற்பொழுது 9000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது. இந்த2500 கோடி ரூபாவும் உள்நாட்டில் அரசாங்க திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலமாகவே கடனாகப் பெற முயற்சிக்கப்படுகின்றது.

அதேவேளை வங்கி அல்லாத துறைகளிடம் இருந்து கடந்த ஜூனில் 200 கோடி ரூபாவிற்கு யுத்த உறுதி நோட்டு விற்பனை செய்த சிறிலங்கா அரசாங்கம் மேலும் 300 கோடி ரூபாவிற்கு கடந்த மாதம் யுத்த உறுதி நோட்டுக்களை விற்பனை செய்ய சந்தையில் விட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள்திருடர் பிடிபட்டார்

(நல்லூர்)

கல்வியங்காடு சந்தையில் நேற்றுமத்தியானம்சைக்கிள் பாதுகாப்பில் நின்ற சைக்கிளைத் திருடிச் சென்ற உருத்திரபுரத்து வாசியொருவர் அவரது உறவினர் வீட்டின் முன் வைத்துக் கையும் மெய்யுமாகப்பிடிக்கப்பட்டார். சைக்கிளுடன் அவர் சைக்கிள்பாதுகாப்புப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## அலுப்பாந்தியில் பரீட்சார்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அலுப்பாந்தித்துறை இன்னும் சில தினங்களில் கப்பல் போக்கு வரத்து, சரக்குகளை இறக்குதல், கையாளுதல் போன்றவற்றிற்காக பரீட்சித்துப்பார்க்கப்பட உள்ளது.

இந்தப்பரீட்சார்த்த முயற்சி வெற்றி அளிக்கும் பட்சத்தில் இத்துறைமுகத்திலேயே பொருள்களை இறக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் இதனால் பொருள்களின் விநியோகம் சீராகும் என்றும் கூறப்படுகின்றது. (சு)

## வவுனியாவில் புளொட்டால் தமிழ் மக்களுக்குத் தொல்லை

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பில் உலாவரும் புளொட் குழுவினரால் பொதுமக்களில் பலர் பெரிதும் பாதிப்படைந்து வருவதாக அறியப்படுகிறது.

மக்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே உலாவ வேண்டும் என்று இக்குழுவினர் நிர்ப்பந்திப்பதாகவும், பொதுமக்கள் பலரின் அடையாள அட்டைகளை அபகரித்து வைத்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

## தொடர்ச்சியான திருட்டு நேற்றுப் பிடிபட்டது

(தெல்லிப்பழை)

ஒரு நபரிடம் பல நாட்கள் தொடர்ச்சியாகத் திட்டமிட்டுத் திருடப்பட்ட திருட்டுச் சம்பவம் நேற்றுக் காலையில் அம்பலத்திற்கு வந்தது.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது, கடந்தகால சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்களால் தமது வீட்டை விட்டு வெளியேறி வேறு இடத்தில் தங்கியிருந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் பெருந்தொகையான வெண்காயம், மரவள்ளிக்கிழங்கு, பதினாறு கோழிகள், வாழைக்குலைகள் என்பன ஒரு வாரத்தில் காணாமல் போயின. இதனால் ஆத்திரமடைந்த விவசாயி நேற்றுக் காலை மரவள்ளித் தோட்டத்தில் பதுங்கியிருந்தார். இரண்டு இளைஞர்கள் அங்கு வந்து மரவள்ளியை இழுக்கவே அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின்பீரங்கித்தாக்குதலால் தமிழ் அகதிகள் படகு மூழ்கடிப்பு

(திருக்கோணமலை)

ஸ்ரீலங்கா கடற்படையினர் திருக்கோணமலையில் இருந்து அகதிகள் சென்ற மூன்று வள்ளங்கள்மீது பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டதில் ஒரு வள்ளம் கடலினுள் பயணிகளுடன் மூழ்கடிக்கப்பட்டது. வள்ளத்தில் இருந்த ஏனையோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள திரியாய்ப் பகுதியில் இருந்து முல்லைத்தீவிற்கு மூன்று வள்ளங்களில் அகதிகள்சென்றுகொண்டிருந்தபோது நடுக்கடலில் வைத்து இந்த வள்ளங்களின் மீது ஸ்ரீலங்கா கடற்படையினரால் பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரின் இத்தாக்குதலால் ஒருவள்ளம் அதில் பயணம் செய்த அகதிகளுடன் கடலினுள் மூழ்கடிக்கப்பட்டது. ஏனைய இரு வள்ளங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பி. எம். சி கட்டடத்தில் புதிய இராணுவ முகாம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கடல் மார்க்கமாகவும், வான்மார்க்கமாகவும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந் நடவடிக்கையின் ஒரு பகுதியாக பி. எம். சி கட்டடத்தில் இராணுவத்தினரால் புதியமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (மு)

## தொடர்ந்தும் செஞ்சிலுவை பராமரிப்பில் இருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை மீண்டும் பழைய இடத்தில் செயற்படத் தொடங்கினாலும் மானிப்பாய் வைத்தியசாலை வைத்தியப் பிரிவு தொடர்ந்தும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் பராமரிப்பில் இருக்கும்.

இந்த வைத்தியப் பிரிவுக்கு தற்பொழுது சங்கானையில் இயங்கிவரும் தெல்லிப்பளை வைத்தியசாலை இடம் மாற்றப்படும். இதில் மனநோய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்

(கொழும்பு)

இலங்கை மனித அடிப்படை உரிமைகள் சட்டத்தில் வரும் ஜனவரியில் திருத்தம் கொண்டுவரப்படும் என்று பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் வங்கி

## ஸ்ரான்லி வீதிக் கிளையில் ஆவணி மாத ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி ஸ்ரான்லிவீதி கிளையில் ஆவணிமாதம் வரையிலான ஓய்வூதியம், உள்ளூர் ஆட்சிசபை, புகையிரதப் பகுதி ஆகியவற்றில் பணிபுரிந்தோர் தவிர்ந்த அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கிளையில் இதுவரை ஓய்வூதியம் பெறாதவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 9–10 மணிவரையுள்ள அலுவலக நேரத்தில் தமது ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு வங்கிமுகாமையாளர்கேட்டுக்கொள்கின்றார்

(4ஆம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் ஊர்காவற் படையாலும், இராணுவத்தினராலும்

## திருமலையில் இருபத்திமூன்றுதமிழர் குற்றுயிருடன் ரயர்போட்டு எரிப்பு

(திருக்கோணமலை)

சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் அகதிமுகாம்களில் கைதுசெய்த இருபத்திமூன்று தமிழ் அகதிகளை வாளால் வெட்டியும், துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தும் படுகாயப்படுத்தியபின் உயிருடன் ரயர் போட்டு எரித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: மூதூர், பச்சைநூர் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ் அகதிகளை சென்ற மாதம் இருபத்தி மூன்றாந் திகதி கைது செய்த சிறிலங்கா இராணுவத்தினர் இராணுவ வாகனங்

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட் பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு.

B-1554



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. மன நோயியல் பேராசிரியர்
4. நோயியல் பேராசிரியர்
5. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத்தவிசு
6. கழலையியலில் அறக் கொடைத்தவிசு
7. ஒட்டுண்ணியியல்/நுண்ணுயிரியல் / மகப்பேற்றியலும் மாதர்நோயியலும்/குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ சமூக மருத்துவம்/ மருந்தியல் மருத்துவம்- விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
8. உடற்றொழிலியலில் உதவி விரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர்
9. அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்

சம்பள அளவுத்திட்டம்

1. பேராசிரியர் தரம் 11: ரூபா 12, 200 – 6x300 - 14, 000 / - மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம்II ரூபா 8,000- 5x250 – 9,250/- மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர்(மருத்துவம்): ரூபா 4, 500- 10x200 -6,500/- மாதமொன்றுககு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/- ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப்படுதல் வேண்டும்.)
4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும் அறக் கொடைத்தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவுத்தேதி 1990. 12. 26 ஆகும். ஏனைய பதவிகளுக்கு 1990. 11. 30 ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக் கொடைத்தவிசுப் பதவிகளுக்குவிண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரைஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்பட வேணடும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்தாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லதுஅனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: அறக்கொடைத்தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிக்கும் ஒப்பந்த அடிப்படையிலானநியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1990. 10. 30
(B/1557)


# செயலக உத்தியோகத்தர்கள் இடையில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளில் சொத்துச் சேதமடைந்த அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் பற்றி 9 ஆம் திகதி அக்ரோபர் மாதம் 1989 ஆம் ஆண்டு என திகதி இடப்பட்டிருந்த 49/89 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கிணங்கயாழ். செயலக உத்தியோகத்தர்கள் தொண்ணூற்றி இரண்டு பேர் இந்த நிவாரணத்தை பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு அவற்றினை நேரடியாக கொழும்புக்கு எடுத்து செல்வதாக இருந்தது.

ஆனால் தற்பொழுது அந்த விண்ணப்பங்களிலிருந்து ஒரு சில விண்ணப்பங்கள் மட்டும் மேலிடத்திற்கு சமர்ப்பிப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட விண்ணப்பங்களின் விண்ணப்பதாரிகள் அடைந்த,இராணுவ நடவடிக்கை நஷ்டத்திலும் பார்க்க தற்பொழுது தேங்கிக்கிடக்கும் விண்ணப்பங்களை அனுப்பிய பல விண்ணப்பதாரிகளின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்து உள்ளன. ஆனால் இவை தட்டிக்கழிக்கப்பட்ட நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு விண்ணப்பங்கள் எடுத்துச் செல்லப்படாமைக்குரிய காரணங்களை தட்டிக்கழிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கேட்டபோது விண்ணப்பப்படிவத்தினை நிரப்பியதில் பிழைகள் இருப்பதாக இறுதிநேரத்தில் தெரிவிக்கப்பட்டதாக அவ்விண்ணப்பதாரிகள் கூறினர். (லோ)

# நாளை முதல் யாழ்.மாவட்ட ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நவம்பர் 5 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து நடத்தப்படவுள்ளன.

7,8,9,10,11 ஆம் ஆண்டுகளுக்கு ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கருத்தரங்கில்பங்குபற்ற வேண்டும் என பிரதம ஆங்கில பாடவித்தியாதரிசி து.தியாகராசா அறிவித்துள்ளார்.

முதலாவது ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நாளை 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தொடங்குகின்றது. யாழ்ப்பாணம், நல்லூர் வட்டார ஆங்கில பாட ஆசிரியர்கள் இதில்பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்வட்டார ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நவம்பர் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தொடங்குகின்றது.

மானிப்பாய் வட்டார ஆசிரியர்களுக்கு நவம்பர் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு இராமநாதன் கல்லூரியில் தொடங்குகிறது.

நவம்பர் 12 ஆம் திகதி திங்கள் காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சாவகச்சேரி வட்டார ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு தொடங்குகிறது.

பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவு ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நவம்பர் 15ஆம் திகதி வியாழன் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

## ஒய்வூதியமாக 250 ரூபா

(சங்கானை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் தற்போது ஆவணி மாத ஒய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி வங்கியில் போயா விடுமுறை தினமாக இருந்த போதிலும் ஒய்வூதியக்காரரின் நன்மை கருதி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் இருநூற்றி ஐம்பது வீதம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான மீதிப் பணம் பிறிதொரு நாளில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 'ஆமி'யென திருடன் மிரட்டல்

(மல்லாகம்)

தெல்லிப்பளையில் திருமதி திலகவதி. முருகையா என்பவரின் சங்கிலியைத் திருடிக் கொண்டு சென்ற திருடன் தன்னைத் துரத்திக் கொண்டு வரும் மக்களை திசை திருப்ப ஆமிக்காரன் வந்திட்டான் என்று கூறி பயப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் சில இளைஞர்கள் இதனை பொருட்படுத்தாது துரத்திச் சென்று திருடனை பிடித்து தெல்லிப்பளை விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் ஒப்படைத்தனர். (83)


**விக்னா டியூஷன் சென்ரர்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கலந்துரையாடல்

O/L Day Class [5 - 11 - 90 திங்கள் காலை 9மணி]
O/L Sat, Sun [10-11-90 சனி காலை 9மணி]
O/L Evening Class [5 - 11 - 90 திங்கள் பி. ப. 3மணி]
ஆண்டு 6, 7, 8, 9 [5 - 11 - 90 திங்கள் பி. ப. 3மணி]

**A/L கலை, வர்த்தக வகுப்புகள்**

A/L Sat, Sun – 90, 91, 92 ஆம் ஆண்டு [10 - 11 - 90 காலை 9மணி]
A/L Day Class – 90ஆம் 91 ஆம் ஆண்டு [12- 11 - 90 காலை 9மணி]

மீண்டும் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை சம்பந்தமாகவும் மேலும் விபரங்கள் பற்றிய கலந்துரையாடலில் சகல மாணவர்களும், ஆசிரியர்களும் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:- வெளிமாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த சகல மாணவர்களும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அதிபர்

(B/1553)



**90 ஆம் நாள் நினைவு அஞ்சலி**

கோட்டையிலே எமது புலிக்கொடி பறக்கும் வேளையிலே
பார்த்து மகிழ்ந்திடமுன் உம்முயிர் களப்பலியானதன்றோ!
கல்லறையில் உன்னுடல் துயின்றாலும் உன் நண்பருடன்
உன்னாவி, மலரும் தமிழீழத்தில் நிச்சயம்உலாவுமன்றோ!!



**கப்டன் ஜொனி**

செல்வன்
(தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

| | |
|---|---|
| தமிழ்த்தாய் மகிழ்ந்திட | தமிழ்த்தாயகம் மலர்ந்திட |
| மலர்வு | உதிர்வு |
| 09-01-1970 | 05-08-1990 |

கோட்டையில் புலிக்கொடி ஏற்றிடவென்று
கொள்கையில் நிலையாய் நின்ற-நம் புலிகள்
காட்டிய பாதையில் சென்றுமே - எங்கள்
கப்டன் ஜொனியவன் களப்பலியானான்
களம்பலகண்ட ஜொனியே - உந்தன்
கனவுகள் நனவாய் மாறுமின்னாளிலே
உனதுயிர் மண்ணின் சுதந்திரம் வேண்டியே
உந்தனின் பாதையில் நாமினித் தொடர்வோம்

-சக நண்பர்கள்

விடுதலைக்கு வித்திட்ட வீரமுள்ள மகனே!
அடிமையின் சின்னம் தகர்க்க அதிகாலை போனவனே!
தமிழினத்தின் தளைஒடித்து தரணிபோற்ற நடந்தவனே!
கடுகதியில் போய்விட்டாய் கண்மணியே என கலங்கி நிற்கும்
உன்தாயிலும் தமிழீழத்தாயை உயிரென மதித்தாய்
இருபதிலே போகிறேனென ஏங்கி நீ நிற்கவில்லை
ஆயிரம்தான் சென்றாலும் அழிந்திடுமோ உன் நினைவுகள்

அன்னாருடன் கோட்டையில் வீரமரணமெய்திய
சக நண்பர்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் ஆறாம் மாதம்
அவரது இல்லத்தில் நடைபெறும்

திருநெல்வேலி - வடக்கு
திருநெல்வேலி.

பெற்றோர், சகோதர, சகோதரி,
உற்றார், உறவினர்கள்.

R-798

## சிந்தனைக்கு

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல

— திருவள்ளுவர்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 04-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## ஒய்வூதியத் திட்டமல்ல வெளியேற்றும் திட்டம்

"சுயவிருப்பத்தின் பெயரில் இளைப்பாறுதல்" என்ற ரீதியில் சில சலுகைகளை வழங்கி இவ்வருட இறுதிக்குள் தமது கடமையில் இருந்து அரச உத்தியோகத்தர்களை ஐம்பத்தைந்து வயதிற்கு முன்னதாகவே ஓய்வு பெறச் செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த ஓய்வூதியத்திட்டம் சிறிலங்காவில் வேலையில்லாத சிங்கள இளைஞர்களினால் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளைக் குறைக்கும் நோக்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் வேலை வாய்ப்புக்கள் தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் மக்களின் இன வீதாசாரப் பரம்பலுக்கு ஏற்கவே வழங்கப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தொடர்ச்சியாக அறிவித்து வந்தாலும், நடைமுறையில் அவ்வாறானதொரு நிலை இல்லை தொடர்ந்தும் சிறிலங்கா நிர்வாகமும், நிறுவனங்களும் சிங்கள மயமாக்கப்பட்ட வண்ணமே உள்ளன. அதிலும் சிறுபான்மையினருக்கு என ஒதுக்கப்படும் சிறியளவு வேலை வாய்ப்புக்களும் முஸ்லிம்களுக்கே ஒதுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுச் சேவைக்கான வேலை வாய்ப்புகளில் ஒரு தமிழரும் (எந்தச் சிறுபான்மையினரும்) சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து சென்ற தமிழரின் இடங்களுக்கு சிங்களவர்கள் முழுமையாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இன்று இதேபோன்றதொரு நிலையே ஏனைய துறைகளிலும் நிகழ்கின்றது. எடுத்துக்காட்டாக திருமலையில் பிறிமா தொழிற்சாலையில் வேலை செய்த 400தமிழரின் இடங்களுக்கு பிரதியீடாக 300சிங்களவருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. முன்னரே சிங்களவர் மயமான அத்தொழிற்சாலை இன்று முற்று முழுதாக சிங்கள மயமாக்கப்பட்டு விட்டது. அதாவது தேசிய ரீதியில் மட்டுமல்ல தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில்கூட நிர்வாகத்தை சிங்கள மயமாக்குதலே அரசின் திட்டமாகும்.

இதற்கு முழுச்சிங்கள இராணுவத்தை(இதனை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவே கடந்த வாரம் ஒப்புக்கொண்டுள்ளார்) உறுதுணையாக அரசாங்கம் பயன்படுத்துகின்றது.

இந்தநிலையில் அரசாங்கத்தின் விருப்பத்தின் பேரில் இளைப்பாறுதல் திட்டமானது, சிங்கள இளைஞருக்கு வேலை வாய்பைக் கொடுப்பது மட்டுமல்ல. மறைமுகமாக அரச உத்தியோகங்களில் இருந்து தமிழரை கழற்றிவிடும் திட்டமுமாகும்.

இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் வந்ததன் பின்னர் படிப்படியாக நிர்வாகத்தில் ஏற்பட்ட சிங்கள மயமாக்கல் காரணமாக இன்று விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழர்களே உயர் அதிகாரிகளாக நிர்வாக சேவையில் உள்ளனர். இவர்களையும் இந்த சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறுதல் திட்டத்தின் மூலம் வெளியேற்றிவிடலாம் எனவும் அரசாங்கம் எண்ணி இருக்கலாம்.

மேலும் வடக்கு, கிழக்கில் அரசாங்கம் எந்தவித வேலைவாய்ப்புக்களையோ, அபிவிருத்தித்திட்டங்களையோ கடந்த சில தசாப்தங்களாக ஏற்படுத்தவில்லை. அத்தோடு இருந்த பொருளாதார திட்டங்களையும், சேவை மையங்களையும் அழித்தொழித்து வருகின்றது. இவ்வாறான நிலையில் இங்கு அரசாங்கத்தால் புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுதல் என்ற பேச்சிற்கே இடமில்லை.

இவற்றிற்கும் மேலாக இன்று வடக்கு கிழக்கில் இருந்து இராணுவக்கெடுபிடிகளால் பல ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர். இதனால் மக்களின் தொகைக் கேற்ப உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களும் பெருகுவதற்கு வாய்ப்பில்லை. குறைக்கப்படுவதற்கே வாய்ப்புக்கள் உண்டு.

இந்த நிலையில் அரசாங்கத்தின் திட்டத்தின்படி சுயவிருப்பத்தின் பேரில் தமிழர்கள் அரச உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறுதல் சமூகத்திற்குக் கேடு விளைவிக்குமே ஒழிய நன்மை ஒன்றும் விளைவிக்கப் போவதில்லை.

இதனை உணர்ந்து தமிழ் உத்தியோகத்தர்கள் இந்த இளைப்பாற்றுத்திட்டத்தைப் புறக்கணித்தல் வேண்டும். அத்தோடு இதை ஊழியர்களும், ஏனையோர்களும் ஊக்குவிப்பதையும் நிறுத்த வேண்டும்.

3

## "உதிக்கும்திசைநோக்கி உன்னத பயணம்"

திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து வெளியேறியோரில் கணிசமானோர் முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்று விட்டனர். இவர்களில் அநேகர் யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவுக்கும் போய்ச் சேர்ந்து விட்டனர். ஏற்கெனவே நடைபெற்ற இனஅழிப்பு நடவடிக்கைகளின் போது இந்தியாவுக்குச் சென்றவர்கள் அங்கே ஏதாவதொருதொழில் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. இம்முறை இந்த வசதிகள் எதுவும் இல்லை. அப்படியிருந்தும் இங்கிருந்து போனவர்கள் படகு கவிழ்ந்தும், கடற்படைசுட்டும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

திருமலை மாவட்டத்தில் தம்பலகாமம் மகாவித்தியாலயம், கிண்ணியா ஜி.பி.எஸ்கிளப்பன்பேர்க், கந்தளாய் பரமேஸ்வரா வித்தியாலயம், இறால்குழி பாடசாலை, நிலாவெளி தேவாலயம், கோபாலபுரம் பாடசாலை, சாம்பல்தீவு தேவாலயம், பச்சைநூர் பாடசாலை, பச்சைநூர்தேவாலயம், 59 ஆம் கட்டை பாடசாலை, மூதூர் தியேட்டர், பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம், சம்பூர் பாடசாலை, கூனித்தீவு பாடசாலை, வெருகல் பாடசாலை, ஆகிய இடங்களில் அகதிகள் தங்கியுள்ளனர். இதைவிட வெருகல் பகுதி (மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி) கதிரவெளிபாடசாலை வாகரை ஆகிய இடங்களிலும் தங்கியுள்ளனர். இதில் தம்பலகாமம் போன்ற பகுதிகளில் இருப்பவர்களின் நிலை மிகப் பரிதாபகரமானது. இவர்கள் அங்கிருந்து எங்கும் தப்பமுடியாது. தேவையான போது இவர்கள் இழுத்தெடுத்துக் கொண்டு செல்லப்படுவர். எவரும் உயிருடன் திரும்புவது இல்லை என்றார் ரூபன்.

இவர்கள் பெயர் விபரங்கள் உண்டா? என்று கேட்டேன். இதோ பாருங்கள் என்றுபதிவுப் புத்தகத்தை நீட்டினார்.

ஆனிமாதம் 2 ஆம் திகதி கனகசபை (கோவிலடி - 65 வயது), ஈஸ்வரன் (வர்ணமேடு - 31 வயது), கோணேசபிள்ளை(வர்ணமேடு-37வயது) ஐயாத்துரை (கள்ளிமேடு - 26 வயது), சுப்பிரமணியம் (கோவிலடி -29 வயது), குட்டி (மேற்குகொலனி-31 வயது)... இப்படியாக பட்டியல் நீண்டு கொண்டே போனது. தம்பலகாமத்தை இராணுவமும் முஸ்லிம் காடையரும் எரியூட்டிய போது இவர்கள் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர் என்றார். இப்படியாக ஆடி மாதம், ஆவணி மாதம் என்று முகாமிலிருந்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அனைவரின் பெயரும் இருந்தன. (இத்தொடரை எழுதுகையில் கூட 23 - 10 - 90 அன்று கிளப்பின்பேர்க் அகதி முகாமிலிருந்து 23 தமிழ் பொதுமக்கள் உவர்மலைக்கு கொண்டு செல்லப்பட்டு முஸ்லிம் ஊர்காவல் படையினராலும், சிறிலங்கா இராணுவத்தாலும் படுகொலை செய்யப் பட்டனர் என்று செய்தி வந்துள்ளது)

என்று கேட்டேன், உயிர் வாழ்வதற்குப் போதுமான உணவு இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் இவர்கள் என்றார் ரூபன். சமூகநல ஸ்தாபனங்கள் எதுவும் இவர்களுக்கு உதவி செய்யவில்லையா என்று கேட்டேன். திருக்கோணமலை மாவட்டத்தில் சமூகநலஸ்தாபனங்களின் கண்ணில் தெரிவது சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும்தான். தமிழர்களை அவர்கள் அகதிகளாகவோ, ஏன்மனிதர்களாகவோ கருதுவது இல்லை என்றார் அவர். எதைக் கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன். அகதிமுகாம்களில் இருந்து அடிக்கடி தமிழர்களைக் கைது செய்கிறார்கள். பச்சைநூர் அகதிமுகாமில் இருந்து 42 பேரைக் கைது செய்த சம்பவம் மூதூர் உதவி அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் முன்னிலையில் தான் நடைபெற்றது. தங்கள் பொறுப்பில் உள்ள முகாமில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. அதே வேளை சிங்கள மக்களின் வயல்களுக்குத் தண்ணீர் தேவையென்பதற்காக இராணுவம் வரப்பயப்படும் இடங்களுக்கு இவர்கள் தண்ணீர் திறந்து விட வருகிறார்கள். இதிலிருந்து யாருடைய நலனை இவர்கள் முதன்மைப் படுத்துகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம். சிலவேளை தமது உயிரைப் பாதுகாக்க இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கலாம் என்றார் ரூபன்.

அகதிமுகாம்களில் நடக்கும் சம்பவங்களை விளக்கமாகக் கூறுங்கள் என்றேன். இதை நான் சொல்வதைவிட சம்பந்தப்பட்ட மக்களிடம் நீங்கள் நேரடியாகக் கேட்பது தான் நல்லது: எனினும் ஒரு விடயத்தைக்குறிப்பிடுகிறேன் 13-9-90 அன்று தமது மிதிவெடியின் சக்தியை பரீட்சித்துப் பார்ப்பதற்காக பச்சைநூர் அகதிமுகாமில் இருந்த இருசிறுமிகளை தாம் புதைத்த மிதிவெடிகளுக்கு மேலால் நடந்து செல்லச் சொன்னார்கள் இராணுவத்தினர். இதனால் ஒன்பது வயதுச் சிறுமி காலையும், எட்டுவயதுச் சிறுமி கண்ணையும் இழந்துள்ளனர். வைத்திய பரிசோதனை செய்வதற்கு தடுப்பு முகாமில் இருந்த யூதர்களைப் பயன்படுத்தினான் ஹிட்லர்: எமது நாட்டில் இராணுவ பரிசோதனைகளுக்கு தமிழர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றார் வேதனையுடன்.

அகதி முகாமிற்கு வெளியிலும் தமிழர்கள் உண்டா? என்று கேட்டேன். அகதி முகாமில் கைதுசெய்யப்படுவதும், பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படுவதும், தொடர்வதால் முகாம்களுக்குச் செல்லப்பயப்பட்டு அநேகர் காடுகளில் வாழ்கிறார்கள். இதைவிட மலைமுந்தலில் 78 குடும்பம், பாட்டாளிபுரத்தில் 100 குடும்பம், வீரமாநகரில் 110 குடும்பம். அரிப்பில் 184 குடும்பம், நல்லூரில் 88 குடும்பம் எந்தவித உதவியும் இல்லாமல் இருக்கிறார்கள் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூகநல ஸ்தாபனங்களின் பார்வை மறந்தும் கூட இவர்கள்மீது படுவது இல்லை. இதற்கு அவர்கள் கூறும் காரணம் அகதிமுகாம் இருந்தால் தான் உதவி செய்வோம் என்பது தான், தங்கள் பொறுப்பில் உள்ள அகதிமுகாம்களில் கைது செய்தலையும் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாவதையும் கண்முன்னால் பார்த்தும் இப்படியான பதிலைச் சொல்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் இவை இயங்குகின்றன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்றார். தலையைப் பிய்த்துக் கொண்டேன்.

*திருக்கோணமலை மாவட்டத்தில் சமூகநல ஸ்தாபனங்களின் கண்ணில் தெரிவது சிங்களமக்களும், முஸ்லிம் மக்களும்தான். தமிழர்களை அவர்கள் அகதிகளாகவோ, ஏன் மனிதர்களாகவே கருதுவது இல்லை.*

— ரூபன்



(தொடரும்)

## பிரித்தானிய துணைப்பிரதமர் ஜவ்ரிஹோவ் ராஜினாமா

(லண்டன்)

பிரித்தானிய துணைப்பிரதம மந்திரி ஜவ்ரிஹோவ் தமது பதவியைராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரித்தானிய பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சரை சந்தித்த ஜவ்ரிஹோவ் தனது ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார்.

ஐரோப்பிய பொருளாதார நாணய ஒற்றுமை குறித்து ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக தாம் பதவி விலகியதாக அவர் தெரிவித்தார்.

தான் ஐரோப்பிய இலட்சியவாதியல்ல வென்றும், சமஷ்டி ஆதரவாளனும் இல்லை என்றும் அவர்தெரிவித்தார். மார்க்ரகிட் தட்சரின் போக்கு பிரித்தானியாவை வறுமை நிலைக்கே கொண்டு போகும் எனத் தெரிவித்தார்.

## நவாப் சரீப் பாகிஸ்தான் புதிய பிரதமர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் புதிய பிரதமராக நவாப் சரீப் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த வாரம் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற இஸ்லாமிய ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளால் ஏகமனதாக சரீப் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் பெனாசீர் பூட்டோ ஆட்சிக்காலத்தில் பஞ்சாப் முதன் மந்திரியாக இருந்தவராவார்.

# மலையகத் தமிழரின் வாக்குகளில் அரசாங்கம் மறைமுக வெட்டு

(கொழும்பு)

மலையகத்தில் வாக்காளர் இடாப்பில் தமிழர்களின் வாக்குகளைக் குறைத்து, அப்பகுதியில் சில தொகுதிகளில் மலையகத் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் கைங்கரியத்தை அரசாங்கம்மேற்கொண்டு வருகின்றது. நுவரெலியா மாவட்டத்தைத் தவிர்ந்த மற்றைய பகுதிகளில் 1988 ஆம் ஆண்டைக் காட்டிலும் வாக்காளர் இடாப்பில் மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. அரசாங்க மட்டத்திலுள்ளசிலரின் ஒத்தாசையுடன் வாக்காளர் இடாப்பில் தமிழர்களின் பெயர்களை வேண்டுமென்றே அகற்றும் வேலையில் சில அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். மலையகத்தமிழர்களைப் பழி வாங்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று மலையகத் தமிழர்களின் அமைப்புகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

## ஒரே குடும்பத்தில் 7 பேர் பலி

கதிர்காமத்தில் நேர்த்திக் கடன் செய்யச் சென்றுகொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் உடவளவை ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் ஏழு பேரும் நுகேகொடையைச் சேர்ந்த வர்த்தகரான உபாலி பொத்தேக குடும்பத்தினராவர்.

## தொடர்ந்தும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியப் பிரிவும், ஏனைய வைத்திய சிகிச்சைப் பிரிவுகளும் அடங்கியிருக்கும் என செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## மேலும் ஒரு இணையமைச்சர் இராஜினாமா

வி.பி.சிங் அரசாங்கத்திலிருந்து பாராளுமன்ற விவகாரத்துணை அமைச்சர் திரு. பங்கா நேற்றுத் தன் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். தான் தேவிலாலைச் சந்தித்துப் பேசியபிறகே ராஜினாமாச் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மீரட்டில் நேற்றும் 15 சடலங்கள் மீட்பு

(டெல்கி)

அயோத்தியில் நேற்று முன்தினம் ராம ஜென்மபூமி ஆதரவாளர் மீது பொலிஸ் சுட்டதில் நூற்றுக்கும் அதிகமானோர் காயமுற்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மீரட்டில் உயிரிழந்த 33 பேர்களில் நேற்றும் 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் ஊரடங்கு அமுலில் உள்ள 24 நகரங்களில் அமைதி நிலவுவதுடன், கான்பூர், பீகார், மத்தியப் பிரதேசத்திலும் அமைதி நிலவுகிறது.

ராமஜென்மபூமி-பாபர்மசூதி பிரச்சினை

## பாகிஸ்தானின் கருத்திற்கு இந்தியா கண்டனம்

(டில்லி)

ராம ஜென்மபூமி, பாபர் மசூதி தொடர்பாகப் பாகிஸ்தான் தலைவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது. பாகிஸ்தான் வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறுகிறதென்றும், இது இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும் என்றும் இந்தியா தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் மதசார்பான நாடானதால் இந்நிலையைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாது என்று டில்லியில் வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் கண்டித்துள்ளார்.

## பெருமழையால் மீன்பிடி பாதிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் பெய்துவரும் பெருமழை காரணமாக மீனவர் மீன்பிடிக்கச் செல்ல முடியாமலும், பிடித்த மீனை உலர வைக்க முடியாமலும் ரூபா 50 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர் சங்கம் தெரிவித்துள்ளது இதேவேளை சென்னைத் துறைமுக வளாகத்தைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதால் துறைமுகத்திலிருந்து கரியை எடுக்க முடியாது உள்ளதாம். சென்னை மின்சார வாரியம் வெள்ளத்தை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## தொடர்ச்சியான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு சிலரின் உதவியுடன் அவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்துத் தெல்லிப்பழை பிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைத்தார். தெல்லிப்பழையைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் மேல் விசாரணைக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். (ச)

## வேலை நிறுத்தம்

சென்னையில் 30,000 தொலைபேசித் தொடர்பு ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா கணேசபிள்ளை

(இளைப்பாறிய நிர்வாக அதிகாரி)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சங்கிலியன் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா கணேசபிள்ளை அவர்கள் கடந்த திங்கட்கிழமை (29.10.90) அன்று காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், இந்திராணி (ஜெர்மனி), மகாராணி (காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும், முல்லைத்தீவு), குமரேஸ்வரநாதன் (ஆசிரியர், யா/ வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), விக்னேஸ்வரன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் அருமைப் புதல்வரும், திருமதி திருமேனி கனகாம்பிகையின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற திருமேனியின் மைத்துனரும், இராசரத்தினம், சிவஞானவதி, நேசரஞ்சினி (ஆசிரியை, யா/ செங்குந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிதரன், கஜந்தரன், ஹேமாயினி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் (30.10.90) செவ்வாய்க்கிழமையன்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை மிக்க மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

குடும்பத்தினர்

44/7, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(R 799)

## இடமாற்றம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனை நல்லூருக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் சிறிலங்கா விமானப்படை மேற்கொண்ட தாக்குதலால் தலைமைப் பணிமனை பலத்த சேதமடைந்துள்ளதெனவும், திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்வரை தலைமை அலுவலகம் நல்லூருக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரான்லி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இந்தக் கிளையில் சகல வங்கிக் காசோலைகளும், வெளிநாட்டு உண்டியல்களும்தீர்வைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் நடைமுறைக்கணக்குகளை வைத்திருப்பவர்கள் தமது ஒக்டோபர் 31 ஆம் திகதிவரையான கணக்குக்கூற்றுக்களைவங்கிஅலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் முகாமையாளர் கேட்டுள்ளார்.

மேலும் சேமிப்புக்கணக்கு, நடைமுறைக்கணக்கு வைத்திருப்போர் 1000 ரூபா வரையான தொகையினை தமது கணக்கில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில்

## மனித உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்கா கவலை

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக அமெரிக்கா கவலை அடைந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கத்துறை துணை அமைச்சர் ஜோண் ஹெலி தெரிவித்துள்ளார். இதுவரை கடந்த நான்கு மாத யுத்தத்தில் 4,700 பேர்வரை இறந்துள்ளதாகத் தெரிவிக்கும் அவர் இலங்கையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காண்பது சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுடைய கையில் தான் தங்கியுள்ளது என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

## தற்கொலை முயற்சிஅதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாகத்தற்கொலைக்கான முயற்சி செய்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

கடந்த பதினைந்து நாட்களில் மட்டும் எட்டுப்பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது வாழ்க்கையில் ஏதோ ஒரு காரணத்திற்காக மனமுடைந்த நிலையில் ஏதோ ஒரு வழியைக் கையாண்டு தற்கொலை செய்ய முயற்சித்துள்ளனர். இவ்வாறு யாழ். போதனா மருத்துவமனைப் புள்ளிவிபரம் ஒன்று எடுத்துக் காட்டுகிறது. (க)

## கடற்படை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளில் இருந்த இரு பெண்கள் உட்பட பத்துத்தமிழ்ப்பொது மக்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கிளப்பன்பேர்க் தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர்கைதுசெய்யப்பட்ட பெண்ணையும், சிறுமியையும் கடற்படையினர் விடுதலை செய்ததுடன் ஏனைய எட்டுப் பேரையும் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். இவர்கள் மூதூர், பச்சைநூர் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இச்சம்பவத்தையே ஸ்ரீலங்கா அரசானது தமிழீழவிடுதலைப் புலிகளின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும், படகிலிருந்தோர் கைது செய்யப் பட்டதாகவும், இப்படகுகளில்உணவுப் பொருட்கள் இருந்ததாகவும் அரச படையை ஆதாரங் காட்டி இலங்கை வானொலியில் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

## மனிதஉரிமைகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித அடிப்படை உரிமைகள் தொடர்பாகஇப்பொழுது உள்ள சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம்பற்றி சர்வகட்சி மாநாட்டில் ஏற்கனவேவலியுறுத்தப்பட்டதாம்.

ஆதலால் தான் இதற்கு இணங்கி இது தொடர்பாக திருத்தம் கொண்டுவரப்பட இருக்கிறது என சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

இதற்கான திருத்தங்கள் அடுத்தவருட ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சிறிலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை இந்த வருடம் பாதுகாப்புச் செலவிற்கு என ஒதுக்கப்பட்ட பணத்தினை விட அடுத்த வருடத்திற்குக் கூடுதலான பணம் ஒதுக்கப்பட்டிருப்பினும், யுத்தம் தொடருமானால் அந்த ஒதுக்கீடும் போதாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந் நிலையில் சிறிலங்கா அரசாங்கம் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் எனவும், இதனால் மானியங்களில் அரசாங்கம் கை வைக்க வேண்டி வரும் எனவும் பொருளியலாளர்கள் கருதுகின்றார்கள்.

இதனை உறுதிப்படுத்துமாப் போல் கடந்த மாதம் பெருந்தோட்டத் துறைக்கு வழங்கப்பட்டு வந்த உரமானியம் நிறுத்தப்பட்டு. அவை பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## திருமலையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் அவர்களைப் பலவந்தமாக ஏற்றி வந்து திருமலையிலமைந்துள்ள கிளப்பன் பேர்க் தடுப்பு முகாமில் வைத்து அவர்களை மூர்க்கத்தனமாக அடித்துச் சித்திரவதை செய்தனர்.

பின்னர் இப் பொதுமக்களை சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் வாகனத்தில் ஏற்றிவந்து திருமலை நகரப் பகுதியில் அமைந்துள்ள உவர் மலைக்கு கொண்டுசென்றனர்

அங்கு வாகனங்களில் இருந்து இந்த அகதிகள் இறக்கப்பட்டவுடன் முஸ்லிம் ஊர்காவற்படையினரும், சிறிலங்கா இராணுவத்தினரும் வெறித்தனமாக இவர்கள் மீது பாய்ந்து வாள்களால் கண்டதுண்டமாக வெட்டியதுடன் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமுஞ் செய்தனர்.

இவ்வாறு வாள் வெட்டுக்கும், துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகிய இருபத்தி மூன்று பொதுமக்களை இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் குற்றுயிருடன் ரயர் போட்டு எரித்துக் கொலை செய்துள்ளனர். இச்சம்பவத்தில் வாள் வெட்டுக்கு இலக்காகிய இளைஞர் ஒருவர் தப்பியோடிவந்து விடுதலைப் புலிகளிடம் அடைக்கலம் புகுந்துள்ளார்.

ஏற்கனவே ஆவணி மாதம் இருபத்தைந்தாம் திகதி பச்சைநூர் அகதி முகாமில் தங்கியிருந்த நாற்பத்தியிரண்டு பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் கொல்லப்பட்டுள்ளனர். இதேபோல் தம்பலகாமம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த அகதிகளில் ஆடி மாதம் இரண்டாந் திகதி பதினேழு பேரும், ஆவணி மாதம் இருபத்தைந்தாம் திகதி இரண்டு பேரும், புரட்டாதி மாதம் ஒன்பதாம் திகதி நான்கு பேரும் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருமலைப் பகுதியிலுள்ள அகதி முகாம்களில்தங்கியுள்ள அகதிகள் இவ்வாறு கைதாகிப் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்து நடந்து வருவதால் இந்தமுகாம்களில் உள்ள ஆண்கள் தப்பியோடிக் காடுகளில் வசித்து வருகின்றார்கள்.

## ஆசிரியர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லியன் ரூபா பணத்தை காசாக யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகளுக்கு அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் கோரியுள்ளார். மேற்படி கோரிக்கை கல்வி அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச்சர், அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஆகியோருக்கு யாழ். அரசாங்க அதிபர், யாழ். கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஊடாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு அரசு சாதகமான பதிலைத் தராதவிடத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேரடிப் போராட்டத்தில் இறங்குவது தவிர்க்க முடியாததாகி விடும் எனவும் பொதுச் செயலாளர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.